
அறிஞர் அண்ணா
நமக்கு அறிவூட்டுகின்ற
கடவுள்!
டற் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

XA. 273

# அறிஞர் அண்ணா
## நமக்கு அறிவூட்டுகின்ற
# கடவுள்!

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

4595/2

தொகுப்பு

**கழஞ்சூர்**
**சொ.செல்வராஜி**

குருதாசி குருசாமி பதிப்பகம்
வேலூர்-9.வ.ஆ.

கழஞ்சூர் சொ. செல்வராஜி
தேர்வு நூல் வரிசை 9

முதற்பதிப்பு ஆகஸ்ட் 1985


உரிமை: டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு

விலை ரூ. 5-00

அச்சிட்டோர்;
வீரபத்திரர் அச்சகம்,
1/2, ஆறுமுக ஆச்சாரி சந்து,
சென்னை-600 005.

# காணிக்கை

ப. ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, சி. என். அண்ணாதுரை ஆகியவர்களை சுயமரியாதை இயக்கத்தில் சேர்க்க காரணமாக இருந்த 'சுயமரியாதைச் சுடர்' பூவாளுர் அ. பொன்னம்பலனாருக்கு இந்நூல் காணிக்கையாகப் படைக்கின்றோம்.



பொன்னம்பலனாருடன் கழஞ்சூர் செல்வராஜி

"நண்பர்கள் ப.ஜீவானந்தம், குத்தூசிகுருசாமி, சி. என். அண்ணாதுரை ஆகியவர்களை அன்புடன்

அழைத்துச் சென்று பெரியார் பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் பங்கு கொள்ளும்படி வேண்டிக் கொண்டேன். பங்குகொண்டார்கள்; பணியாற்றினார்கள்.''

பூவாளூர் அ. பொன்னம்பலனார்
அண்ணா பொன்விழா மலர்
(ஆதாரம்) 'திராவிடன்' 21-9-1959

சுயமரியாதை இயக்கத்தின் முதல்கட்ட தலைவர்,

மூடநம்பிக்கை பழக்கவழக்கங்களை ஒழிக்கப் பாடுபட்டவர்,

சாதியை ஒழிக்க, கலப்பு மணம் செய்து தமிழ் நாட்டுக்கு வழிகாட்டியவர்.

பாப்பனரல்லா மக்களுக்கு (தமிழர்களுக்கு) சுமார் 40 ஆண்டுக்காலம் போராடி பல சலுகைகளை தமிழர்களுக்குப் பெற்றுத்தர பாடுபட்ட அந்த உத்தம தலைவனுக்கு,

தமிழ் நாட்டில் பிறந்த நாள் விழா இல்லை!


தமிழ் நாட்டில் சிலை இல்லை!!

நகருக்கோ, வீதிக்கோ, அவர் பெயர் இல்லை!!!

சுயமரியாதை இயக்கமுதல், திராவிடர் இயக்கம் வரையில், அதன் வளர்ச்சிக்கு உழைத்து, எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மறைந்த அந்த உத்தம தலைவர் சேவையைப் பாராட்டி, புகழ்ந்து வருகின்ற நன்றி உள்ள திராவிடர் இயக்க தோழர்கள் சார்பாக இந்நூலை 'காணிக்கை'யாக்குவதன் மூலமாகப் பெருமையடைகிறோம்.

# நன்றியுரை

இந்நூல் வெளிவர அன்புகூர்ந்து பொருளுதவி செய்த மாண்புமிகு யா. சை. மு. யூசுப் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர்,



யா. சை. மு. யூசுப் அவர்கள்

வ. ஆ. மா. அண்ணா தி. மு. க. செயலாளர் திரு. ஏ. எம். ரகுநாதன் ஆகியோருக்கு எனது 'நன்றி'யை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

கழஞ்சூர் சொ. செல்வராசன்



டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்,
சென்னை-9.

# அணிந்துரை


தமிழ்நாட்டின் பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் ஈ. வெ இராமசாமி அவர்களின் கொள்கை வழி நின்ற செயல்வீரர்களின் உள்ளங்கள் தோறும், நீக்கமற நிறைந்து விளங்குகின்ற பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிப் பொன்மனச்செம்மல் டாக்டர் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அவ்வப் போது ஆற்றிய உரைகள், எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றில் சிலவற்றை மட்டும் திரட்டி, இந்த நூல் வடிவில் நம்மிடம் காணிக்கையாகத் தந்துள் ளார் நண்பர் கழஞ்சூர் செல்வராசு அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவரின் இதயத்தில் எப்படிப் பட்ட இடத்தில் இருந்தார் என்பதையும், அறிஞர்

அண்ணா அவர்களிடத்தில் புரட்சித்தலைவர் அவர்கள், எப்படிப்பட்ட நன்மதிப்பையும், நன்னம்பிக்கையையும், அன்பையும், அணைப்பையும் கொண்டிருந்தார் என்பதையும், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுத் திறன், ஆற்றல் திறன், பண்பாட்டுத் திறன், பாடுபடும் திறன் ஆகியவை புரட்சித் தலைவரின் உள்ளத்தை எந்த அளவுக்குக் கவர்ந்திருக்கின்றன என்பதையும், அறிஞர் அண்ணா அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்கு தம்முடைய தலைவராகவும், வழிகாட்டியாகவும், ஆசானாகவும் கொண்டிருக்கிறார் என்பதையும் இந்நூல் மிகத் தெளிவாகவும், திட்பமாகவும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

புரட்சித் தலைவர் அவர்கள் காங்கிரசை விட்டு விலகி மூன்று ஆண்டுகள் வாளா இருந்த பிறகு, தாம் ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தில், அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ்ச் சேர்ந்தேன் என்பதைக் குறிப்பிடும்போது ''அண்ணா எழுதிய பணத்தோட்டம் படித்தேன், பின்புதான் தி. மு. க.வில் சேர்ந்தேன், அண்ணா அந்நூலில் பொருளாதாரத்தைப் பற்றி மிக எளிய நடையில் எழுதியுள்ளார்'' என்று கூறுகிறார்.


நண்பர் கழஞ்சூர் செல்வராசு அவர்களின் முயற்சி; பயன் தரத்தக்கது; பாராட்டுக்குரியது; பலரும் படித்துப் பயன் பெறுவார்களாக!



சென்னை,
20-8-1985.



அறிஞர் அண்ணா



டாக்டர் புரட்சித் தலைவருடன்
கழஞ்சூர் செல்வராஜி



முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

# அறிஞர் அண்ணா



## நமக்கு அறிவூட்டுகின்ற கடவுள்!

கார் பரிசளிப்பு விழாவில்

## புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.

அறிஞர் அண்ணா அவர்கள் காட்டியுள்ள இலட்சியம் மிகத் தூய்மையானதாகும். அந்த இலட்சியம் ஒன்றினால்தான் இந்த நாட்டு மக்களின் வாழ்வையும் வளத்தையும் உருவாக்கமுடியும். இந்த நாட்டின் எதிர்காலம் அத்தனையும் அறிஞர் அண்ணா அளித்துள்ள இலட்சியத்தின் வெற்றியில் தான் அடங்கி இருக்கிறது என்று புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் எம். எல். சி. அவர்கள் குறிப்பிட்டார்.

சிதம்பரத்தில் 29-9-1963 அன்று அறிஞர் அண்ணா அவர்களுக்கு நடைபெற்ற கார் பரிசளிப்பு விழாவில் அறிஞர் அண்ணா அவர்களிடம் கார் சாவியை அளித்துப் பேசுகையில்தான் மேற்கண்டவாறு புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர் வாழ்நாளில் சில நல்ல வாய்ப்புகள் கிடைப்பது இயற்கையாக இருக்கலாம். என்னைப் பொருத்தவரை இந்த வாய்ப்பை நான் இதற்கு முன்பு எதிர்பார்த்ததுமில்லை—கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.

பியட்கார் சாவியை எனது தலைவருக்கு நான் கொடுப்பது ஒரு விசித்திரமாக இருக்கிறது. யார் யாருக்குக் கொடுப்பது என்று யோசித்துப் பார்க்க வேண்டும் நான் இந்த சாவிதரும் பொறுப்பை ஏற்றதானது— எனது வாழ்நாளில் இதை ஒரு கிடைத்தற்கரிய பேறாக— வாய்ப்பாக— பாக்கியமாகக் கருதித்தான் ஏற்றேன்.

இந்த நாட்டின் உயிரையே ஒப்படைக்கிறோம்.

இந்தக் கார் சாவியைக் கொடுக்க பல நல்லவர்கள் இருக்கையில் நான் என் தலைவருக்குக் கொடுபபது விசித்திரம் கலந்த ஒரு சம்பவம்தான்.

அரசியல் துறையிலே தகுதிபெற்ற நல்ல அறிவாளராக இருக்கவேண்டும். மற்ற துறைகளிலே தனிப்பட்ட சிறப்பியல்புகளைப் பெற்றவராக இருக்கவேண்டும்.

இதிலே எந்தத் தகுதியையும் பெறாத நான் கார் சாவியைக் கொடுப்பது விசித்திரம்தான். இப்பேற்றினை எனது ஆசையின் காரணமாக ஏற்றுக்கொண்டேன். ஆசை என்பது கூட அவ்வளவு பொருத்தமாகாது. பேராசை என்று கூடச் சொல்லுவேன்.

## பேராசை கொண்டேன்

நான் இதற்குத் தகுதியற்றவனாயிருந்தும் இந்தச் சாவியை என்னால் அறிஞர் அண்ணாவுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று விழா தோழர்கள் என்னிடம் கூறும்போது மறுத்தேன். ஆனால், மறுபடியும அதுபோலக் கூறமாட்டார்களா என்று காத்திருந்தேன். அவ்வளவு பேராசையாக இருந்தேன்.

(கார் சாவியை அண்ணாவிடம் தந்தார்)

பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருக்கும் இந்த மக்கள் வெள்ளத்திலே என் தலைவரை நான் எப்படிப்பட்ட வார்த்தைகளிலே வாழ்த்துவது என்றே தெரியவில்லை. இருந்தாலும் இதயத்திலே வைத்திருக்கும் அன்பின் காரணமாக எதைக் கூறுவது என்று புரியாமல் எனது நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

எத்தனை நாளைக்கு இந்தச் சாவியை அறிஞர் அண்ணா வைத்திருப்பாரோ தெரியாது. அவரிடமுள்ள இந்தக் கார் அவருக்கு மட்டும் பயன்படுத்துவதாக இருக்காது. கட்சிப் பணிகளுக்க்

செல்லாம் பயன்படுத்தப்படும். காரை யார் யாரெல்லாமோ பயன்படுத்தப்பட வேண்டிய நிலை உருவாகும். அறிஞர் அண்ணாவிடம் இந்தச் சாவி நீடித்தும் நிலைத்து மிருக்காது போய்விடும்.

## காரோட்டிக்கு அறிவுரை

கார் சாவியை அறிஞர் அண்ணாவுக்குக் கொடுப்பதற்கு முன்பு இந்தக் காரை ஓட்டும் காரோட்டிக்கு ஒன்று கூறிக்கொள்கிறேன்.

யாரைக் காரிலே வைத்து இந்தத் தோழர் ஓட்ட இருக்கிறார்?

எப்படிப்பட்டவரைக் காரிலே வைத்து ஓட்டப் போகிறீர்கள்?

என்பதை ஒரு கணம் யோசித்துப் பார்த்து காரை ஒவ்வொரு விநாடியும் அவர் ஓட்டிவர வேண்டும்.

## புதிய சமுதாயத்தை உருவாக்குபவர்

இந்த நாட்டின் ஈடு இணையற்ற ஒரு இலட்சியத்தைக் காரிலே வைத்து ஓட்டப்போகிறீர்கள். விடுதலைக்காகத் துடிதுடித்து உழைத்து வரும் ஒரு கொள்கையைக் காரிலே வைத்து ஓட்டப் போகிறீர்கள்.

இலட்சியம் என்றால், வறுமையற்ற வாழ்வை இந்த நாட்டுக்குத் தேடித் தரும் இலட்சியமாகும்.

ஏற்றத் தாழ்வுள்ள சமத்துவ வாழ்வை நல்கும் ஒரு இலட்சியம்-மொழி வாழவேண்டும் என்பதற்கான இலட்சியம்-மக்கள் யாவரும் வாழ வேண்டும் என்ற திட்டத்தை நடைமுறைக்கு உருவாக்கும் ஒரு இலட்சியம். வேண்டாதவற்றை - நம்பிக்கையற்றவற்றை ஒழித்து-நல்லதொரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அந்தச் சமூதாயம் எவ்விதக் குறைபாடுகளுமின்றி வாழ வேண்டும் என்ற தூயதொரு இலட்சியத்தை மனத்திலே உடையவரை சுருக்கமாகச் சொல்வேன். இந்த நாட்டின் உயிரையே கார் ஓட்டும் தோழர் காரிலே வைத்து ஓட்ட இருக்கிறார்கள்.

ஒரு வேளை காரோட்டித் தோழரின் கவனக் குறைவால்—நாம் விரும்பாத சம்பவம் நடைபெற்று விட்டால்—நாம் சகிக்காத நிகழ்ச்சி நிகழ்ந்தால். இந்த நாடு தாயில்லா நாட்டைப் போலாகிவிடும். தாயும்-தந்தையு மற்ற குடும்பம் போல இந்த நாடாகும்.

## முடிவற்று நீளும்

அத்தகைய தொரு சம்பவம் நமது தலைவருக்கு ஏற்படாது என்று துணிந்து சொல்கிறேன். அறிஞர் அண்ணாவின் வயது 55 என்றாலும் அவரது உழைப்பாலும் ஆர்வத்தாலும் செயற்கரிய செய்கின்ற செயலாலும், அறிஞர் அண்ணாவின் வயது முடிவற்று நீண்டுகொண்டே போகும்.

## அறிஞர் அண்ணா அவர்களால் இலட்சியம் வெற்றிபெறும்

அறிஞர் அண்ணா நமக்குக் காட்டியுள்ள இலட்சியத் தூய்மையானது மக்களின்வாழ்க்கை வளத்தை உருவாக்கும் இலட்சியமாகும். பணம் பெரியதல்ல- இந்தக் காரும்கூடப் பெரியதாகாது அவரது அன்புப் பரிசுக்கு. பணம் இன்று வரும் நாளை போகும். இந்த நாட்டு வாழ்வு ஒரு நாளோடு முடிந்து விடுவதல்ல. பல மாதங்களாக - ஆண்டுகளாக-நீடித்து உழைத்து ஆற்றப்பட வேண்டிய திட்டமாகும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க அறிஞர் அண்ணாவைத் தவிர இந்த நாட்டில் வேறு ஒரு தலைவர் கிடையாது.

அவரால்தான் இந்தத் திட்டங்களை உருவாக்கித்தர முடியும். (மக்கள் கைதட்டி மகிழ்ச்சி யூட்டினர்.) அத்தகைய அரிய திட்டத்தைத் தீட்டித் தரும் நம் தலைவர் அறிஞர் அண்ணா நீண்ட காலம் வாழ்வார்கள். அவர்களால் நமது இலட்சியம் உருவாகும். நாமும் வெற்றி பெறுவோம். அதுவரை நமது தலைவரை நாம் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளவர்களாக இருக்கிறோம். அந்த எண்ணத்திலே காரோட்டித் தோழரும் ஈடுபட வேண்டும்.

### நம் தலைவர்க்குக் காணிக்கையாக்குகிறோம்

அறிஞர் அண்ணா தனக்கு கார் தேவை என்று கூறியிருந்தால், எத்தனையோ கார்கள் அவர் முன் வந்து நிற்கும். தனிப்பட்டவர்கள் கார்

கொடுப்பதிலே இத்தகையதொரு பெருமை இருக்காது. உழைப்பாளர்கள்-உழவர் பெருமக்கள்- பாட்டாளித் தோழர்கள்-நெசவாளர்கள்-கட்சி சார்பற்றவர்கள்—பல பெரியவர்கள் தந்த பணத்திலிருந்து தான் இந்தக் கார் வாங்கப்பட்டு அவர்களால் அன்பளிப்பாகத் தரப்பட்டிருக்கிறது.

இந்தக் கார் எந்த மனிதனுக்கும் சொந்தமல்ல; நாட்டுக்கே சொந்தமானது அறிஞர் அண்ணா தனிமனிதரானாலும், மக்களிடையே பணத்தை வசூலித்து—அவர்களது இதய ஆசையாகத் தங்களிடம் கிடைத்த பணத்தைக் கொடுத்து-இந்தக் காரை நம் தலைவருக்குக் காணிக்கையாகத் தருகிறார்கள்.

### கடவுள் என்றால் யார்?

காணிக்கை என்றால், பல ரகமுண்டு, கடவுளுக்குக் கூட காணிக்கையளிப்பார்கள். கடவுள் என்றால் யார்? அறிவைக் கொடுப்பவர் கடவுள். அன்பை வழங்குபவர் கடவுள். அறிஞர் அண்ணா இந்த நாட்டுக்கே அறிவை வழங்குகிறார். மக்களுக்கெல்லாம் அன்பை ஊட்டுகிறார். எனவே, அறிஞர் அண்ணாவைக் கடவுள் என்றால் மிகையாகாது. அவருக்குத்தான் நாம் காரைக் காணிக்கையாக்குகிறோம்.

நம் தலைவர் பல இலட்சம் தம்பிமார்களைக் கொண்டவர். அவருக்குக் கழக உறுப்பினர்கள் கார் வாங்கித் தர வேண்டும் என்று நினைத்தால், பல கார்களைக் கூடல் வாங்கித் தர முடியும்.

அப்படிப்பட்ட ஒரு காருக்கு இந்த விழாவின் பெருமை எப்படி வரும் ? இது பொது மக்களிடையே கழகத் தோழர்களுக்கிடையே, உழைப்பாளிகளிடையே, மாணவர்களிடையே வசூலிக்கப்பட்ட பணத்தால் பரிசளிக்கப்பட்ட விழாவாகும்.

அறிஞர் அண்ணாவின் வயது என்ன ? அவர் இந்த நாட்டுக்காற்றிய தொண்டு என்ன ? அந்தத் தொண்டுகள் மக்களிடையே விளைவித்த பயன் என்ன என்பதை இந்த விழாவிலே எடுத்துக் காட்டவே இந்த விழா நடைபெறுகிறதே தவிர, காருக்காக விழாவல்ல-அதற்காக நான் இங்கே வரவில்லை; அதற்குரிய நிகழ்ச்சியுமல்ல இது.

நான் எனது வாழ்நாளில் பல நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளேன். அதிலே தலையானது அறிஞர் அண்ணாவுக்குக் கார் பரிசளிக்கும் நிகழ்ச்சிதான்.

நான் முதன் முதலில் அறிஞர் அண்ணாவை 1946-ல் அவர் எழுதிய ‘ சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் ’ என்ற நாடகத்தில் நடித்த போது, டி. வி. நாராயணசாமி அவர்கள் மூலமாக அண்ணாவைக் கண்டேன்.

அப்போது நான் காங்கிரசிலே இருந்து விலகி ஒதுங்கியிருந்த நேரம்.

எந்தக் கட்சிலேயும் பணியாற்றாமல் ஒதுங்கியிருந்தேன். நெற்றியிலே விபூதி பூசி. கழுத்திலே உத்திராட்சக் கொட்டைகளை அணிந்துகொண்டு

கதராடைகளை உடுத்திக்கொண்டிருந்தேன். அப்படிப்பட்ட தோற்றத்தில் அன்று அறிஞர் அண்ணா கண்டதும் எந்த அன்பாடு என்னை அழைத்தாரோ அதே அன்பைத்தான் நான் இன்றும் அவரிடம் காண்கிறேன்.

## கழக இலட்சியம் நாட்டுக்கேற்றது!

யார் வந்தார்; எதற்காக வந்தார்; எந்தக் கட்சிக்காரர் வந்தார் என்பதைப் பாராமல், மனிதன் வருகிறான் — அதுவும் நடிகர்களிலே ஒருவன் வருகிறான் என்பதை அறிந்துகொண்டு என்னை அன்போடு வரவேற்றார். அதற்குப் பிறகு 7, 8 ஆண்டுகள் கழித்து கழகக் கொள்கையை நன்றாகப் புரிந்து இத்தகைய திட்டம் இந்நாட்டு மக்களுக்கு உண்மையாகவே தேவையான ஒன்று தான் என்பதைத் தெரிந்த பின்புதான் கழகத்தில் சேர்ந்தேன்.

## கல்லக்குடி போராட்டம்

கல்லக்குடி போராட்டத்தின்போது நான் கட்சியில் இல்லை. ஆனாலும் நான் போராட்டத்தில் ஈடுபட முயன்றேன்.

கல்லக்குடி போராட்ட நேரத்தில் பல பட முதலாளிகள் என்னைப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தார்கள். நான் போராட்டத்தில் ஈடுபட இருக்கிறேன். அப்போது ஒப்பந்தங்களை ஏற்க முடியாதென மறுத்தேன். குலக்கல்வித் திட்டத்தை

எதிர்த்து அப்போது அறிஞர் அண்ணா அவர்களும், மற்ற தலைவர்களும் போராட்டத்திலீடுபட்டுக் கைதாகியிருந்த நேரம். அப்போது நான் சிறைக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபடப் போகிறேன் என்ற கருத்தைக் கூறினேன். அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள், "கட்சியைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு வா, இப்போது வேண்டாம்" என்று என்னைத் திருப்பி அனுப்பி விட்டார். நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால்.

அரசியல் கட்சிகள் பல யாராவது புகழ் பெற்ற வர்கள்வரமாட்டார்களா என்று ஏங்கிக்கிடக்கன்றன. அந்தக் கட்சிகளுக்கிடையே அறிஞர் அண்ணாவைத் தலைவராக ஏற்றுள்ள கட்சி "நான் போராட வரு கிறேன்" என்றபோது "எப்போது நீ கட்சியைப் புரிந்துகொண்டு வருகிறாயோ அப்போது வா, என் றார்." எனவே, அறிஞர் அண்ணாவின் கடமை உணர்ச்சியை-அன்பு உணர்ச்சியை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் நாம் மனிதர்களாகமாட்டோம்.

நன்னிலம் வட்டத்திலே அறிஞர் அண்ணா என்னைப்பற்றிப் பேசியபோது மரத்திலே பூவாக—காயாக இருந்தது இப்போது கனியாகி இருக்கிறது என்றார். அறிஞர் அண்ணா யாருக்காக அதைக் கூறியதாகக் கருதுகிறாரோ அது எனக்குத் தெரியாது. ஆனால், நான் அதை எனக்காகக் கூறிய தாக ஏற்று நடக்கிறேன்.

பூவாக இருந்த நான் கனியாகும் வரை அறிஞர் அண்ணா காத்திருந்தார். ஆனால், தடிகொண்டு

அடித்துப் பழுக்க வைத்த பழமல்ல, அப்படிப்பட்ட அரிய குணங்களைக் கொண்டவர் அறிஞர் அண்ணா.


''தி.மு. கழகத்தில் இருப்பவர்கள் தானாகவே சம்பாதித்து வாழும் தகுதியும், பெருமையும் பெற வேண்டும் என்றார். எவன் எந்தத் துறையிலே இருக்கிறானோ, அவன் அந்தத் துறையிலே நன்றாக சம்பாதித்து வாழ வேண்டிய தகுதி பெற வேண்டும்'' என்றார்.

நான் கலைத்துறையில் எனது வருவாயை நானாகவே வளர்த்துக் கொள்ளும் அளவுக்கு மாற்றியமைத்திருக்கிறேன். அறிஞர் அண்ணா எனக்காகத்தான் நன்னிலம் வட்டத்து நிகழ்ச்சியில் அந்த அறிவுரையைக் கூறினாரோ என்று கருதி எனது கலைத்துறையை மாற்றியிருக்கிறேன் என்று அந்சதையாகக் கூறவில்லை.

அடக்கத்தோடும் அதே நேரத்தில் பெருமையோடும் கூறிக்கொள்கிறேன்.

கார் சாவியை அவருக்குக் கொடுக்கிறோம். கொடுக்கும் இந்தச் சாவி, மக்களின் அடிமைத் தளையை ஒழித்து விடுதலைக்குரிய விழிப்புணர்ச்சியை யூட்டும். மக்களின் இதயப்பூட்டுகளைத் திறக்கும் சாவியாக இருக்கும் என்று கூறி இந்தச் சாவியை அறிஞர் அண்ணாவிடம் கொடுக்கிறேன்.

''முரசொலி'' 5—10 1968.



## நமது அண்ணா
## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

தந்தை,

தாய்,

அண்ணன்,

தமக்கை

என்று அழைக்கப்படும் பெயர்கள் எல்லாம் உறவின் அடிப்படையில், பொதுவாக எல்லோருக்குமே அமையக்கூடியவை.

ஆனால், இந்தப் பெயர்களால் அழைக்கப்படுகிறவர்கள் எல்லோருமே, அந்தப் பெயர்களின் தன்மையுணர்ந்து, பொறுப்பை ஏற்றுக் கடமையை ஆற்றுகிறார்களா என்றால் அது குறை காணக்கூடிய கேள்வியாகவே இருக்கிறது

பொறுப்புணர்ந்து கடமையை ஆற்றினாலும் கூட மற்றையோர் அதனை முற்றிலும் உணர்ந்து போற்றுகிறார்களா என்றால், அதுவும் குறை காணும் அளவிலேயே இருக்கிறது.

உடன் பிறப்பால், இரத்த பாசத்தால், உறவுப் பிணைப்பால் ஒரு குடும்பத்தவராக உள்ளவர் களிடத்திலேயே, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு உள்ளுணர்வோடு பழகும் நிலை குறைவாக இருக் கும்போது, குடும்பத்தில் ஒருவராகப் பிறக்காமல், ஆனால், குடும்பத்தில் ஒருவராகக் கருதப்பட்டு அண்ணா என்று வாயார, நெஞ்சார அழைக்கப் படும் ஒரு மாபெரும் அதிசயத்தை ஏற்படுத்தி விட்டவர் பேரறிஞர் அண்ணா.

இயற்கையாகவே அவருக்கு 'அண்ணா' என்று பெயர் அமைந்தது, மற்ற குடும்பங்களுக்கெல்லாம் கூட அவர் 'அண்ணா'வாக அமைந்தது போற்றத் தக்கதோர் அரிய நிகழ்ச்சியாகும்.

தன்னிலும் வயதானவரை 'அண்ணா' என்று அழைப்பது இயற்கை எனலாம். ஆனால், 75 வயதானவர்கூட அறுபதே வயதான பேரறிஞர் அண்ணாவை 'அண்ணா' என்று அழைத்தார்களே, அது நடக்க முடியாத அதிசயம். ஆனால், அது நடந்துவந்தது!

பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சித் தலை வராக மட்டும் இல்லை; அவர் மக்கள்சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் அறக்கோட்பாட்டுக்குத் தலைவராக விளங்கினார்!

அவர் பாட்டுடைத் தலைவராகவும், நாட்டுத் தலைவராகவும் விளங்கியதோடு ஒவ்வொருவரின் இதய வீட்டுத் தலைவராகவும் திகழ்ந்தார். அதனால் ஒவ்வொருவரும் அவரைத் தமது குடும்பத் தலைவராகக் கருதினார்கள்.

'குடும்பத் தலைவன்' என்னும்போது மாபெரும் பொறுப்புகளைச் சுமக்க வேண்டி வரும். அண்ணா அவர்கள் கடினமான பொறுப்புகளைக் கூடத் தரமாக வலிந்து ஏற்றுக்கொண்டு சுமப்பார் கள். அது அவருடைய உயர்ந்த பண்பு. பொறுப்பு களை சுமப்பதோடு, அதை நிறைவேற்றும் காலத் திலும், தாமே முன் நின்று நேரிடையாகச் செய் வதற்கும் தயங்கமாட்டார். அயர்ச்சியின்றி, சிறிதும் தளர்ச்சியின்றி தன்னலமற்ற எழுச்சியோடு தொண்டு செய்யும் திண்ணிய மனப்பாங்கு அண்ணா அவர் களிடம் வேரூன்றியிருந்தது.

அண்ணா அவர்கள், 'நாடு எனக்கு என்ன செய்தது? என்று கேட்பதில்லை; நாட்டுக்கு நான் என்ன செய்தேன்?' என்றுதான் கேட்டு வந்தார். இது அவருடைய அடிப்படைத் தத்துவம். மற்றையோர் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக இந்த அரிய தத்துவத்தை முன் வைத்து, அதன் படி தாமே தன் வாழ் நாள் முழுவதும் நடத்திக் காட்டிய செயல் வீரர் அண்ணா அவர்கள்.

மேலும், அண்ணா அவர்கள் எந்த ஒரு நேரத் திலும், 'பிறர் தனக்கு என்ன செய்தார்?' என்

பதை நினைப்பதே இல்லை; தன்னால் பிறருக்கு என்ன நன்மை ஏற்பட்டது. என்பது அவருடைய உள்ளத்தில் ஒலி செய்து கொண்டிருந்தது.

பிரிவினை, மொழிப் போராட்டம், மாநில அதிக அதிகாரம், மதுவிலக்கு, உணவுப் பிரச்சினை முதலியவைகளையும் அவைகளிலிருந்து இந்திய நாட்டுப் பிரச்சினையையும், அதன் மூலம் உலகப் பிரச்சினையையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டு செயலாற்றியதற்கு, அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் பதிந்திருந்த 'பொது நலம்' என்ற உயர்ந்த கோட்பாடு உறு துணையாக இருந்தது.

எந்தப் பிரச்சினையானாலும், கால மாறுதலுக்கு ஏற்றவாறும், தாம் கொண்ட இலட்சியத்தினுடைய சில பகுதிகளை விரிவாக்கவோ, குறைக்கவோ, திருத்தவோ, மாற்றவோ அண்ணா அவர்கள் தயங்கியதே கிடையாது. இதற்குள்ள அடிப்படைக் காரணம் 'பொது நலம்' என்ற தத்துவமே ஆகும்.

மூத்த மகனே குடும்பப் பொறுப்பை ஏற்பது வழக்கம். தந்தை, மகனை, அவன் 'தோளுக்கு மேல் வளர்ந்ததும் தோழன்' என்று அழைப்பது முறை. பதினைந்தே வயதான பையன் ஆனாலும் அவன் தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன் என்று கொள்ளவேண்டும் என்பது பழமொழி.

பேரறிஞர் அண்ணா அவர்களோ தோற்றத்தால் வளர்ந்தவர் அல்லர்; தமது தோளில் சுமைகளைத் தாங்கிக்கொண்ட காரணத்தால் தோழரானார்; தொண்டரானார்; தலைவரானார்; அண்ணன் ஆனார்.

யாராவது ' அண்ணா ' என்று அழைக்கும் போது பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தான் ஏற்படுகிறது. மதத்துக்கும், கட்சிக்கும், குடும்பத்துக்கும் மட்டுமல்ல, எல்லா நிலைகளிலும் எல்லோருக்குமே அவர் ' அண்ணா 'வாக விளங்கிய காரணத்தால் ' அண்ணா ' என்று யாரும் கூப்பிடும் போது எனக்கு உடனே பேறிஞர் அண்ணா அவர் களின் நினைவே உண்டாகிறது. ' அண்ணா ' வாக இருக்க வேண்டுமே அவருடைய பண்பு களையெல்லாம் பிரதிபலிக்க வேண்டுமே என்ற அச்சம் உண்டாகிறது.

இப்படி எல்லோரது எண்ணங்களிலும், இதயங் களிலும் நீங்காது நிறைந்துவிட்ட அண்ணா அவர் களை, ' எனக்குத்தான் அண்ணா, எனக்குத் தான் அண்ணா என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டாலும் பொதுவாக, அவர் நமது 'அண்ணா' ஆகிறார்.

அண்ணா அவர்கள், நம்மிடமிருந்து உடலால் பிரிக்கப்பட்டு ஓராண்டு ஆகிவிட்டது.

ஆனால், அவர் 'நம் அண்ணா' வாக இருப்ப தால், நம் உள்ளங்களிலிருந்து பிரிக்க முடியாது.

நமது தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் நல்லவைகளை நாம் தொடரவும், எந்த எதிர்ப்பையும் ஏமாற்றத்தையும் தாங்கிக்கொள்ளும் இதயத்தை நாம் பெறவும், நம் அண்ணா' அவர்களின் மலரடிகளைக் கண்ணீரால் அர்ச்சித்து உறுதி கொள்வோமாக.

மாலை முரசு
அண்ணா முதலாவது நினைவு மலர்
3—2—70

இந்தக் கட்டுரையை மீண்டும்
வெளியிட்டது திரைச் செய்தி
5—3—77



# அண்ணாவின் அன்புள்ளம்

டாக்டர் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர்.

அரசியல் தலைவர்களுக்கில்லாத பல்வேறு அருங்குணங்களைப் பெற்ற அண்ணா அவர்களை வெறும் அரசியல் தலைவர் என்று மட்டுமே காண்பது பெருங்குற்றமாகும்.

பேரறிஞர் அண்ணா ஒரு நாடகாசிரியர்,

சிறந்த எழுத்தாளர்,

மிகச் சிறந்த பேச்சாளர்,

அனுபவமிக்க பத்திரிகை ஆசிரியர்,

அற்புதமான நடிகர்,

மொழி வல்லுநர்,

பண்பாடுமிக்க மாபெரும் அரசியல் அறிஞர்

என்பதெல்லாம் அவருடைய சிறப்புகள் என்றாலும், இவை எல்லாவற்றையும்விட தூய்மையான 'அன்புள்ளம் கொண்ட அண்ணா' என்று காண்பதிலே தான் முழுமைப் பெற்றதாக முடியும்.

ஆம்;

அவருடைய உள்ளம் அரசியல் உலைக்களத்திலே காய்ச்சிய உருக்கல்ல;

அரசியல் பாலைவனத்திலே அன்பைச் சுரக்கும் ஊற்று அவரது உள்ளம்.

தன்னை அழிக்க எண்ணும் எதிரிகூட துன்பப் படக்கூடாது என்று எண்ணும் கருணை உள்ளம்.

அரசியல் இயக்கங்களிலே கட்சித் தொண்டர்களைப் பலிகடாவாக்கி, அந்தத் தியாகிகளின் மீது தனது தலைமைக் கொடியைப் பறக்க விட நினைப்பது தான் அரசியல் தந்திரம்.

அப்படிப்பட்ட அரசியல் களத்தில் அண்ணா அவர்கள் தான் அரசியல் இயக்கத்தையே ஒரு குடும்பமாகக் கண்டார்.

குடும்பத்திலே காணப்படும் பாசப்பற்று வளர வேண்டுமென விரும்பி, கட்சித் தலைவன் இயந்திர இதயம் உள்ளவனாக இருக்கக் கூடாது என்று தன்னை ஒரு பெரிய குடும்பத்தின் தலைவனாக.

ஒரு மூத்த அண்ணனாக ஆக்கி, தன் கட்சியில் உள்ளவர்களைத் தம்பிகளாக ஆக்கினார்.

அவருக்கு தன்னுடைய சக்தியில் முழு நம்பிக்கை உண்டு.

எழுத்திலோ, பேச்சிலோ, இயக்கத்தை நடத்திச் செல்வதிலோ, யாருக்கேனும் இடம் அளித்துவிட்டால் அவர்கள் தன்னை அழித்துவிடுவார்கள்-தன்னுடைய செல்வாக்கைப் பறித்து விடுவார்கள் என்ற எண்ணமே இல்லாதவர் அண்ணா.

மாற்றாரின் திறமைக்கு மதிப்பளிப்பதிலே ஈடற்றவர் அண்ணா.

இந்தப் பண்புதான் அவரைப் பெரியாரிடத்திலே பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்ற வைத்தது.

இந்தப் பண்புதான் பெரியாரையே எதிர்த்து வெற்றி காண வைத்தது.

தன்னுடைய குடும்பத்திலே ஒரு தம்பிக்கு ஒரு பிள்ளைக்குப் புகழ் பாராட்டு கிடைத்தால் குடும்பத்

தலைவன் எவ்வாறு இதயம் பூரிப்பானோ, அதைப் போல, தம்பிமார்கள் அடையும் சிறப்பைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார்.

இத்தகைய இதயத்தை எந்த அரசியல் தலைவர் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று இருப்பதாகவே தெரியவில்லை.

அண்ணாவின் அன்புள்ளத்தின் முன்னால், தகுதி படைத்தவர்கள்தான் முதலிடம் பெறுவார்கள்.

சமயம் வரும்போது அவர்களை உயர்வு படுத்துவதிலே அண்ணாவுக்கு நிகரானவர்கள் உண்டா என்று தேடிப் பார்க்கிறேன்.

அண்ணா அவர்களின் பாச மிகு குடும்பத்திலே ஓர் உறுப்பினனாக வாழும்போது பெற்றதை எண்ணி எண்ணி மகிழும் நேரத்திலே . . .

அண்ணன் பிறந்த இந்தப் பொன்னாளிலே நம்முடைய பாச உள்ளங்களை அவருடைய பாதங்களில் படைத்து மகிழ்வோம்.

வாழ்க அமரர்
அண்ணா நாமம்

ஃ ஃ ஃ

(1980 ஆம் ஆண்டு முதல்வர் புரட்சித் தலைவர் எழுதியது.)



# பேரறிஞர் அண்ணா கண்ட

# அன்புத்தத்துவம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கிய மாக வாழ்ந்து காட்டினார்கள்.

அண்ணா அவர்களால் அப்படி நடந்து காட்ட முடிந்தது எதனால்? அவருடைய அகமும் புறமும் ஒன்றுபோல் ஒரு பாதையில், ஒரே குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டதே அதற்குக் காரணம்.

அவ்வாறு அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்கப் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அதைப் பயன்படுத்தத் தவறுவதனாலேயே மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நாம் போக வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா ?

பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்து வைத்து, அல்லற் பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும்.

ஏன், மலை மேலே ஏறி இறங்கிப் போகலாம் !

காட்டும் வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம் !

தண்ணீரில் நீந்தியும் செல்லலாம் ! ஆனால், இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவைகளாகஇருப்பதால், பாதசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும் இடர்ப்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி, பாதையே இல்லாதிருந்த இடத்தில், ஓர் ஒழுங்கான பாதையை உருவாக்கி, இந்த வழியாகப் போனால் அங்கே போய்ச் சேரலாம் என்பதையும் குறிப்பிட்டுப் பாதசாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு வசதி ஏற்படுத்தித் தரப்படுமானால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பார்களா ?

தேவையை உணர்ந்து அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, இடையில் குறுக்கிட்டு, ' நமது முன்னோர் இந்தப் பாதையில்தான் சென்றார்களா ? நாம் ஏன் செல்ல வேண்டும் ? ' என்று கேட்பார்களேயானால் அது சிந்தித்து விடையிறுக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

அதேபோல், "முன்னோரின் பாதையில்லாப் பாதையில்தான் போய்க்கொண்டிருக்க வேண்டுமா? சரியான பாதையில் போகக் கூடாதா?" என்ற கேள்விக்கும் முறையாக பதிலை அளிக்கவும் நியாயமான முடிவைக் காணவும் நாம் முயலவேண்டும்.

மக்கள் வாழ்வின் தேவைகளைப் பெருக்கவும், உயிர்களைக் காக்கவும் கருதிப் பாதையில் தரிசாகக் கிடக்கும் நிலத்தைத் திருத்திச் செப்பனிட்டுப் பயிர் விளையும் நிலமாக மாற்றினால், "எங்கள் மூதாதையர் இப்படியெல்லாம் செய்யவில்லை; இந்த நன்செய் நிலத்தின் வழியாகத்தான் போக்குவரத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள். இடையே

வகுக்கப்பட்ட பாதையில் செல்ல மாட்டோம். பயிர்கள் விளைந்திருந்தாலும், அந்த நிலத்தின் வழியாகப் பயிர்களை மிதித்துப் பாழ் படுத்தி, அந்த வழியாகத்தான் போவாம்'' என்றால் அது நியாயமா என்பதைச் சிந்திக்கத்தானே வேண்டும்!

அந்த இடம் பொது இடம்தான். தனி மனிதர்கள் அனைவருக்கும் சொந்தமான இடம்தான். ஆனால் அந்த இடம் இப்போது தரிசாக இல்லை; பயிர் விளையும் நிலமாக ஆக்கப்பட்டு விட்டது. அந்தப்பயிர்களோ மக்களுக்காகவளர்க்கப்பட்டவை. பக்கத்திலோ நேரான பாதை இருக்கிறது. அந்தப் பாதையில் மேடு பள்ளங்கள் இல்லை; போதிய வெளிச்சமும் இருக்கிறது. என்றால் அதை விட்டு விட்டு, விளை நிலத்தைச் சிதைத்துக்கொண்டு செல்வது எப்படி முறையாகும்?

விதவைத் திருமணத்துக்கும், விவாக விலக்குக்கும், கலப்பு மணத்துக்கும், வாழ்க்கை ஒப்பந்தம் பதிவுத் திருமணம் ஆகியவைகளுக்கும் மக்களிடையே ஆதரவு பிறந்ததே, அது எப்படி? இவை யாவும் முன்னோர் பின்பற்றிய நெறிகளா? இல்லையே! அறிவு வளர்ச்சியின் விளைவுகளே யல்லவா?

ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழும் அடிப்படை உரிமை வழங்கப்பட்டு, ஒருவருக்கு மற்றவர்

அடிமையில்லை என்ற உறுதிப்பாடு தரப்பட்டிருக்கிறதே! இதுவும் அறிவு வளர்ச்சியின் பயன் தானே!

இவை யாவும் பழக்க வழக்கத்தால் ஏற்பட்டதென்றாலும், பின்னால் ஏற்பட்ட சட்ட முறைப்படி உருவானவை என்றாலும், இவை அனைத்துமே வாழ்க்கை வசதிக்கு வேண்டிய அடிப்படை உரிமையை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை தேவை; மகிழ்ச்சி தேவை; இந்தத் தேவைகளுக்கு அடிப்படை, வளரவும் வாழவும் தடையில்லாமலிருப்பது தான்.

சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும். புறத்தில் உள்ளது வேறு, அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்த சமூகக் கட்டுப்பாடோ, அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காணமுடியாது.

ஒரு பாதையை வகுக்க பழக்க வழக்கங்கள் தாம், வழி காண்பிக்கும். அறிவு வளர்ச்சியை ஒட்டிப் புதிய கருத்துகள் உருவாகும் போது பழமையில் உள்ள நல்ல கருத்துகள் அழிந்து போய் விடாதவாறு பாதுகாக்கப்படவும் வேண்டும்.

தன்னலம் தேவைதான். அது பொது நலமாகப் பரிணமிக்க வேண்டும்.

ஒரு பெண்ணை ஒருவன் விரும்புகிறான் என்றும், அவளோ அவனை விரும்பவில்லை என்றும் வைத்துக்கொள்வோம். அவனுடைய அகம் அவளை நாடுகிறது. ஆனால், புறச் சூழ் நிலையில் அவனால் அவளை அடைய முடியாத நிலை இருக்குமானால் , புறத்தில் உள்ள நிலைமைக்கேற்பத்தானே அகத்தில் ஆசை அரும்ப வேண்டும்! இயலாத ஒன்றை மனம் விரும்பினால் விளைவது ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

உணவிலும் கூட ஒருவன் எதை எந்த அளவுக்கு உட்கொண்டால் நலம் வருமோ, அவ்வகையில் உட்கொள்வதுதானே முறை ? இயற்கை அவனுக்கென்று ஒருவித அளவில், தரத்தில் ஆற்றலைக் கொடுத்திருக்கிறது. அவனுடைய உடற் கூறுபாடுகளுக்கு ஏற்றாற்போல் அவன் வாழ்வை அமைத்துக்கொள்ளாமல் மாறுபட்டால் ஏற்படுவது அழிவைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும் ?

இதில், தான் மட்டுமா அழிகின்றான் ? தன்னுடைய எண்ணம் செயல் இவைகளால் எங்கெல்லாம் யார் யார் எல்லாம் தாக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கெல்லாம் அழிவுண்டாக்கி விடுகிறான்.

இதனால்தான் அகமும் புறமும் மாறுபடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் பிறக்கிறது. அதற்கு உறுதுணையாக உள்ளது தான் பகுத்தறிவு, அந்தப் பகுத்தறிவை வளர்க்கும் பணியில் தன்னிகரற்று விளங்கியதோடு, அமைதி யான முறையில் மெல்ல மெல்ல மறு மலர்ச்சியை உண்டாக்கியவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களின் மறு மலர்ச்சிக் கருத்து கள் திடீரென்று ஒரு நாள் மக்கள் எல்லோரும், ‘ இதுதான் நமக்கு ஏற்றது ’ என்று முடிவெடுத்து விடவில்லை.

முதலில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆசை கொண்டார்கள். அதன் பின், ‘ அவர் பேசுவதிலும் சில நியாயங்கள் இருக்கத்தானே செய்கின்றன ’ என்றார்கள். பிறகு ‘ அவர் கூறு வதுதான் உண்மை ’ என்று எண்ணத் தொடங்கி னார்கள். இதன் பிறகு பல நேரங்களில், பற்பல சூழ்நிலைகளில் அவரவரும் தங்களின் அநுபவ வாயிலாக அறிந்து, சிந்தித்துப் பிறகு, இது தான் ஏற்றது என்ற முடிவுக்கு வந்து, அப்போதும் எதிர்ப் பட்ட பல எதிர்ப்புகளைச் சமாளித்துப் பிறகுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தோடு கலந்தார் கள்.

அறிவு என்கிற வழி காட்டி

பகுத்தறிவு என்கிற ஒளி விளக்கு

தன்னம்பிக்கை என்கிற நடை

மனப்பக்குவம் என்கிற வலிமை

இவைகளைக் கொண்டுதான் மனிதன் தனது வாழ்க்கையைக் கடக்க வேண்டியவனாகிறான்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் எதை விரும்ப வேண்டும் என்பது அவனுடைய அகத்துக்கும் புறத்துக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஒரு பெரிய ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்திலே எழுந்தால் மட்டும் போதுமா? உடலிலே வலிமையும் உறுப்புகளுக்குப் பழக்கமும் வேண்டும் அல்லவா. அது போலத் தான்வாழ்க்கையும்!

பொருளாதாரத்தையும், சமூக அமைப்பையும், சமூக நாகரிக வளர்ச்சிக்காக ஏற்படும் மாற்றங்களையும் அனைத்தையுமே 'மக்கள் வாழ்வுக்காக' என்று சிந்திக்க வேண்டுமே தவிர 'எனக்காக, என் ஒருவனுக்காக, என் ஒருவனுக்காகவே' என்று சிந்திக்கக் கூடாது என்ற முடிவைத்தான் அண்ணா அவர்களின் தத்துவக் கருத்துகளைத் துணையாய்க் கொண்டு நான் சிந்தித்துப் பார்த்த அளவில் மிகவும் ஏற்புடையதாக்க கருதலானேன்.

உலகில் பூசலும் போராட்டமும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? தகுதியுடைய

வன் தன் தேவையைப் பெறாதபோது விடுகின்ற கண்ணீர்த் துளிகள் கனலாக மாறுகின்றன.

ஏராளமான பொருள்களுக்குரிய ஒருவர், தன் கண் எதிரில் கஞ்சிக்குப் போராடும் எளிய உருவங்களைக் காணும்போது இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை. ஏன் அவர்கள் அந்த நிலையிலும், நாம் இந்த நிலையிலும் இருக்கிறோம் என்பதையாவது சிறிதளவு யோசிக்க வேண்டுமல்லவா ?

அந்த யோசனை அவருக்கு உண்டாக வேண்டுமானால், இயற்கையான அன்பின் உயிரோட்டப் பண்பு அவரிடம் உண்டாக வேண்டும். அனுபவத்தால் அது எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. அதனால் தான் நாட்டில் வெவ்வேறுபட்ட நிலைகள் காலம் காலமாக வளர்ந்து வருகின்றன.

முந்தைய தலைமுறையில் செயற்பட்டவைகள் எல்லாம் தொடர்ந்து வரவேண்டும் என்று முடிவு செய்தால், நாட்டில் மக்களின் வாழ்க்கை அமைப்பும் பொருளாதார நெறியும் ஒரு கோணத்திலேயே நடை போட்டுக்கொண்டிருக்கும். மேம்பட்டவர்கள் மேலும் மேம்படவும், தாழ்ந்தவர்கள் மென் மேலும் தாழவும்தான் சேரும்.

மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் சூழ் நிலையில் எல்லோருக்கும் நடு நிலையான

வாழ்க்கை வசதி அளிக்கப்பட்டாக வேண்டும் என்ற பிரச்சனை எழுந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன.

இந்த பிரச்சினைக்குரிய சரியான முடிவு பிறக்க அண்ணா அவர்களின் அன்புத்தத்துவம் அதற்கு ஏற்றதொரு வழி காட்டியாக அமைந்திருக்கிறது. மக்கள் அதை உள்ளும் புறமும் ஒருமைப்பாட்டுடன் ஏற்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பது போல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பது போல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும். என்பதே அண்ணா அவர்களின் அந்த அன்புத் தத்துவம். இதைக் கடைப்பிடித்தால் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான உதயம் தென்படும்!

# அண்ணாவின் மணிமொழிகள்

தமிழர்கள், பொதுவில் ஏராளமாகப் பிராமணர்களின் மத விஷயங்கள் தெரியாமலே இருந்து வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

புத்தர்களும், ஜைனர்களும், பிராமணர்களுக்குரிய வேதத்தையும் அதன் கிரியைகளையும், கண்டிப்பாக ஒத்துக்கொள்வதில்லை.

ஃ ஃ ஃ

பிராமண மதத்துக்கு உறைவிடமாயுள்ள சாதி வித்தியாசம், புத்தர்களுக்கும், ஜைனர்களுக்கும் கிடையாது, இப்படி இருந்தும்கூட, இவர்களை இந்து மதஸ்தர்கள் என்று சொல்லுகிறார். இதை விட உண்மையில்லாததும் யோக்யதை இல்லாததும் அர்த்தமில்லாததுமான வார்த்தை ஏதாவது உண்டா? இதுதானா தென்னிந்தியாவிலுள்ள சகல ஜனங்களின் பொது மதம் என்று சொல்லும் யோக்யதை ?

ஃ ஃ ஃ

நான்கு வருணங்கள், இந்த நாட்டில் என்றுமிருந்ததில்லையென்பதை நம்மவர்கள் மறந்து விடுகின்றனர்.

ஃ ஃ ஃ

'பசியோ பசி' எனக் கதறும் மக்கள், பாடுபடாது வாழுபவர் இருக்கும் திக்கு நோக்கித் திரும்பினால் என்ன ஆகும் ?

அந்நாள் வருவது நன்றோ !

# அன்பின் ஊற்று

## மாண்பு மிகு முதல்வர்
## டாக்டர் எம். ஜி. ஆர்.

அரசியல் தலைவர்களுக்கில்லாத பல்வேறு அருங்குணங்களைப் பெற்ற அண்ணா அவர்களை வெறும் அரசியல் தலைவர் என்று மட்டுமே காண்பது பெருங் குற்றமாகும்.

பேரறிஞர் அண்ணா ஒரு நடாகாசிரியர், சிறந்த எழுத்தாளர், மிகச் சிறந்த பேச்சாளர், அனுபவமிக்க பத்திரிகாசிரியர், அற்புதமான நடிகர், மொழி வல்லுநர், பண்பாடு மிக்க மாபெரும் அரசியல் அறிஞர் என்பதெல்லாம் அவருடைய சிறப்புகள் என்றாலும், இவை எல்லாவற்றையும் விட, தூய்மையான அன்புள்ளம் கொண்ட அண்ணா என்று காண்பதிலேதான் முழுமை பெற்றதாக முடியும்.

ஆம்; அவருடைய உள்ளம் அரசியல் உலைக் களத்திலே காய்ச்சிய உருக்கல்ல, அரசியல் பாலைவனத்திலே அன்பைச் சுரக்கும் ஊற்று அவரது உள்ளம். தன்னை அழிக்க எண்ணும் எதிரிகூடத் துன்பப்படக் கூடாது என்று எண்ணும் கருணை உள்ளம்,

அரசியல் இயக்கங்களிலே, கட்சித் தொண்டர்களைப் பலிக்கடாவாக்கி அந்தத் தியாகிகளின் மீது

தனது தலைமைக் கொடியைப் பறக்க விட நினைப்பது தான் அரசியல் தந்திரம் அப்படிப்பட்ட அரசியல் களத்தில் அண்ணா அவர்கள்தான் அரசியல் இயக்கத்தையே ஒரு குடும்பமாகக் கண்டார். குடும்பத்திலே காணப்படும் பாசம் பற்று வளர வேண்டுமென விரும்பி, கட்சித் தலைவன் இயந்திர இதயம் உள்ளவனாகக் கூடாது என்று தன்னை ஒரு பெரிய குடும்பத்தின் தலைவனாக, ஒரு மூத்த அண்ணனாக ஆக்கி, தன் கட்சியில் உள்ளவர்களைத் தம்பிகளாக ஆக்கினார்.

அவருக்குத் தன்னுடைய சக்தியில் முழு நம்பிக்கை உண்டு. எழுத்திலோ பேச்சிலோ இயக்கத்தை நடத்திச் செல்வதிலோ யாருக்கேனும் இடம் அளித்துவிட்டால், அவர்கள் தன்னை அழித்துவிடுவார்கள்; தன்னுடைய செல்வாக்கைப் பறித்துவிடுவார்கள் என்ற எண்ணமே இல்லாதவர் அண்ணா. மாற்றாரின் திறமைக்கு மதிப்பளிப்பதிலே ஈடற்றவர் அண்ணா. இந்தப் பண்பு தான் அவரைப் பெரியாரிடத்திலே பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்ற வைத்தது. இந்தப் பண்புதான் பெரியாரையே எதிர்த்து வெற்றி காண வைத்தது.

தன்னுடைய குடும்பத்திலே ஒரு தம்பிக்கு ஒரு பிள்ளைககுப் புகழ் பாராட்டுக் கிடைத்தால், குடும்பத் தலைவன் எவ்வாறு இதயம் பூரிப்பானோ, அதைப் போல, தம்பிமார்கள் அடையும் சிறப்பைப்

பார்த்து மகிழ்வார். இத்தகைய இதயத்தை எந்த அரசியல் தலைவர் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று இருப்பதாகவே தெரியவில்லை.

அண்ணாவின் அன்புள்ளத்தின் முன்னால், தகுதி படைத்தவர்கள்தான் முதல் இடம் பெறுவார்கள். சமயம் வரும்போது அவர்களை உயர்வு படுத்துவதிலே அண்ணாவுக்கு நிகரானவர்கள் உண்டா என்று தேடிப் பார்க்கிறேன்.

அண்ணா அவர்களின் பாச மிகு குடும்பத்திலே ஓர் உறுப்பினராக வாழும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி மகிழும் நேரத்திலே . . . அண்ணா பிறந்த இந்தப் பொன்னாளிலே நம்முடைய பாச உள்ளங்களை அவருடைய பாதங்களிலே படைத்து மகிழ்வோம். . .

வாழ்க அமரர் அண்ணா நாமம் !

தமிழரசு

16-9-1980

# "அறிஞர் அண்ணா"வின் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் பெருமைப்படுவார்கள் !

திருவள்ளுவர் பெயரைச் சொல்லி நாமும் புகழ் பெறுகின்ற நாள் இந்த நாள்.

சிலரைப் பாராட்டுவதன் மூலம் நாம் புகழ் பெறுகிறோம்; சிலரை எதிர்ப்பதன் மூலமும் நாம் பெருமை அடைகின்றோம். இது மனித இயற்கை.

ஆனால், இந்த நிகழ்ச்சி நம்மையெல்லாம் பெருமைப்படுத்துகின்ற, மனிதனாக்குகின்றநிகழ்ச்சி யாகும்.

என் வரையில் மனச்சாட்சி எனும் அடிப் படையில் ஓர் உருவத்தை முன்னிலைப்படுத்தி நான் என்ன கருதுகிறேனோ அவைகளைச் சொல்ல லாம் என நான் நினைக்கிறேன்.

முதலில் நான் பாராட்ட விரும்புவது சீர்காழி கோவிந்தராசன் மகன் சிவசிதம்பரத்தை, அவரை நான் மனமார, வாயாரப் உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## என் கடமை

இரண்டு மணி நேரம் தமிழில் பாடி உங்களை யெல்லாம் இந்த இடத்தில் கட்டுண்ட பாம்பைப் போல் ஒரே நிலையில் இருந்து கவனிக்கத்தக்க வகையில் அவரது இசைத்திறமையைக் காண் பித்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

இங்கு தமிழ் தெரிந்த நாவலர் போன்றோர் பேசியது ஆச்சரியமல்ல;

அவர்கள் தமிழில் பேச முடியாமல் இருந்தது என்று சொன்னால்தான் ஆச்சரியம்.

ஆனால், வடநாட்டவர்களாக இருக்கின்றவங்கி மேலாளர்களாகப் பணியாற்றுபவர்கள் தமிழில் பேச முன் வந்து நம்மையெல்லாம் திகைப்படையச் செய் தார்களே அவர்கள் உணர்வுகளுக்கு நான் தலை வணங்குகிறேன்.

இந்த உணர்வு வளர வேண்டும் என்பதுதான் நமது கொள்கையே தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை இந்த நிகழ்ச்சி வெளிக்காட்டு கிறது.

அண்ணாவின் கொள்கையை ஏற்றுக்கொண் டவர்கள் பெருமைப்படுவார்கள் என்று நான் நம்பு கிறேன்.

திருவள்ளுவரையும், திருக்குறளையும் பேசும் முன் தமிழ் பற்றி பேச வேண்டுமென்று விரும்பு கிறேன்.

ஏனெனில் படித்தவர்கள்கூட, விவரம் தெரிந்தவர்கள் கூட, சொற்களைச் சரியாக உச்சரிக்கின்ற கடமையை உணரவில்லை என்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

'ன'கரம், 'ண'கரம் இரண்டு சுழி மூன்று சுழி ன கரத்தை, சொல்லும்போது மனிதன் என்கிறார்கள், மணம் என்று மனத்தைச் சொல்கிறார்கள்.

நல்ல கவிஞர்கள்கூட அழகான பாட்டெழுதி வைத்துப் படிக்கும்போது இந்தத் தவற்றைச் செய்கிறார்கள்.

முதலில் அந்தப் பெரியவர்கள், அறிஞர் பெருமக்கள்கூட யாராவது இருந்தாலும் அவைகளைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்ற என் வேண்டுகோளை முன் வைக்கிறேன்.

காரணம், சிறு குழந்தைகள் நம்மைப் பார்த்து, நாம் பேசுவதைக் கேட்டு அவர்கள் பழகிக் கொள்கிறார்கள்.

ஆகவே, அந்தக் குழந்தைகள் நல்ல தமிழில் பேசுவதற்காகவாவது நம்மிடம் இருக்கும் இந்தக் குறையை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

டி.வி.யிலும் வானொலியிலும் சில பேச்சுகள் கேட்க முடிகிறது.

யாரென்று இப்போது சொல்லக் கூடாது; நல்ல கவிதை எழுதியிருக்கிறார்கள்; படிக்கிறார்கள்.

ஆனால், எழுத்துக்கு எழுத்து 'ழ' வை 'ல' என்கிறார்கள், 'தமிலன்' என்கிறார்கள். எதைச் சொல்லக்கூடாதோ அந்த இடத்தில் 'ல'கரத்தை உச்சரிக்கிறார்கள.

இவற்றையெல்லாம் வானொலியிலும் தொலைக் காட்சியிலும் திருத்தவில்லையென்றால் அது சரியல்ல.

இதை 2 நிறுவனமும் நிச்சயமாகக் கவனித்து இனிமேலாவது தமிழுக்கு இழிவான நிலைமை வராமல் அவர்கள் தடுப்பார்கள் என்று இந்த நல்ல நாளில் அவர்களை வேண்டி நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.

எனது இளவயது முதலே எனக்கு கற்றுத் தந்த ஆசிரியர்கள் இதை மிகமிக உன்னிப்பாக, எச்சரிக் கையாக கற்றுக்கொடுத்தார்கள் என்பது மட்டுமல்ல, அந்த வகையில் நாங்கள் வளர்க்கப்பட்டோம்.

### ஒதுக்குவது சரியல்ல

தமிழைப் படித்து அதன் வேகத்தில், உள்ளத் தில் இருக்கிற ஆர்வத்தில் பாட்டெழுதுகிறவர்கள் தமிழில் படித்தவர்கள் எல்லாம் ஏழையாக இருப் பார்கள் என்ற நிலைமை எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது.

இப்போதும் அப்படித்தான் இருக்கிறது என்று யாராவது சொன்னால் நாம் தலை குனிவதைத் தவிர வேறு வழி இல்லை.

ஆகவே, நான் பெருமக்களுக்கு வேண்டிய பாதுகாப்பை முழுமையாகத் தர சக்தியில்லை. ஆனாலும் ஓரளவுக்காகவாவது அவர்கள் மனம் மகிழ்ந்து, நிம்மதி அடைந்து, நான் தமிழை கற்றுக் கொண்டதற்காக நம்மை மதிக்கிறார்கள், தமிழை மதிக்கிறார்கள், என்ற ஒரு நிலைமை அவர்கள் உள்ளத்தில் தோன்றி அவர்கள் வாழ்க்கையில் அமைதி பெறவேண்டும்,

இதற்காகவே இந்த நிகழ்ச்சிகளை நாம் அமைத்திருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நாம் தமிழ்தான் பேச வேண்டும் என்று சொன்னால், தமிழ்தான் பேச வேண்டும். அரசு அலுவலர்கள், அதிகாரிகள் தமிழில்தான் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தருகின்ற பட்டம் பிரிவினை வாதி.

இன்னொரு பட்டம் சுயமரியாதைக்காரன்.

சுயமரியாதை — தன்னுடைய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்வது எப்படிக் கெட்ட பழக்கம் என்று எனக்குத் தெரியவில்லை.

கடவுள் இல்லை என்று சொன்னார்கள் என்ற ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டு, எவ்வளவு நல்ல காரியத்தைச் சொன்னாலும் இவர்கள் கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் என்ற காரணத்தைச் சொல்லி அதை ஒதுக்குவது சரியல்ல.

இந்த நல்ல நாளில் நான் சொல்கிறேன். எங்களைத் தவறாகக் கருதாதீர்கள்.

## தமிழில் கடிதங்கள்

சீர்திருத்தம் என்றாலே கடவுளை நம்பாதவன்; பண்பு இல்லாதவன், அன்பு இல்லாதவன்; அடக்கம் இல்லாதவன்; அகந்தை உள்ளவன் என்பது நிச்சயமாகப் பொருந்தாது என்பதைப் பொருத்தமில்லாதது என்பதை நான் அழுத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

நான் ஆட்சிக்கு வந்த போது சட்ட மன்றத்தில் பலபேர் பேசினார்கள்.

எங்களுக்குக் கடிதங்களெல்லாம் தமிழில் வர வேண்டும் என்றனர். நான் ஓர் உத்தரவு போட்டேன்.

எந்த அதிகாரியும், ஒரு ஆண்டுக்குள் தமிழ் படித்து தமிழில் பேசி தமிழில் எழுதவேண்டும்.

அதுவரை அந்த வாய்ப்பு அவர்களுக்குத் தரப் படும் என்று எழுதினேன்.

அதற்கே சிலர் முணுமுணுத்தார்கள். இவர் எத்தனை வருடம் பதவியில் இருந்து இதுபோல் சொல்லப் போகிறார் என்றுகூடப் பேசினார்கள்.

இவையெல்லாம எனக்குத் தெரியாமலில்லை. அப்படிபட்ட உணர்வு உள்ளவர்கள்கூட அரசு அலுவலகங்களில் இருக்கிறார்கள்.

அரசு அலுவலகங்களில் இருக்கும்போது வங்கி களில் இருக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது.

காரணம் கற்றுக் கொள்ள வேண்டுமே என்ற சோம்பேறித்தனமே தவிர, தமிழுக்குரிய மரி யாதையைத் தர அவர்கள் பின் வாங்கவில்லை என்பதை அறிவேன்.

## இன்பத்தேன்

வங்கி அதிகாரிகள் தமிழைக்கற்றுக்கொள்வோம் என்று கூறியதோடு மட்டுமல்ல; என் அருகில் வந்து அமர்ந்தபோது அடுத்த முறை பேசவாய்ப்புக் கிட்டினால் மிக நன்றாக சுத்தமாகப் பேசுவேன் என்றார்கள்.

இதைக் கேட்கும் போது உண்மையிலேயே 'இன்பத்தேன் வந்து பாயுது காதனிலே' என்று சொன்னார்களே அதுபோல் இருந்தது.

இப்பிரச்னையை நான் எடுத்துக் கொள்ளக்கார ணம் ஒரு பத்திரிகையில்படித்தேன்; கர்நாடகத்தில்

அரசு அலுவலர்கள் கன்னட மொழியைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு தரப்படுமென்று ஒரு உத்தரவை அந்த அரசு சொல்லியிருக்கிறது.

என் அருமைத் தம்பி ராஜ்குமார் பெயரிலுள்ள மன்றங்கள் இதை எதிர்த்திருக்கின்றன.

கன்னடத்தைத்தெரிந்துகொண்டவர்கள் எழுத, பேசத் தெரிந்தவர்கள் தான் அந்த உத்தியோகத் திற்கு நியமிக்கப்படவேண்டுமென்று உண்ணாவிரத மிருந்திருக்கிறார்கள்.

உடனே அந்த அரசு ராஜ்குமார் தலைமையில் ஒரு குழு அமைப்போம் என்று சொல்லியிருக்கிறது.

அதற்கு ராஜ்குமார் சொன்ன பதிலைத்தான் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

## பெரிய பிரச்சினை

எதற்காக என்னை அந்தக் குழுவிற்கு தலைவராகப் போடப்போகிறார்களோ தெரியாது ஆனால் நான் எடுத்துக்கொண்ட கொள்கையை விட்டுவிட மாட்டேன் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இதிலே ஒரு பெரிய பிரச்சனை இருக்கிறது. நான் ராஜ்குமாரை நேரில் சந்தித்துதான் சொல்ல முடியும்; சொல்லப் போகிறேன்.

வங்காளத்திலிருந்து வரும் அதிகாரி இங்கே பணியாற்ற முடியும்.

இங்கே இருக்கும் தமிழர் கர்நாடகத்தில், பஞ்சாபில் பணியற்ற முடியும்.

அஸ்ஸாமில் காஷ்மீரத்தில் பணியாற்றுகிறார்கள். மேகாலயாவில் என்று நினைக்கிறேன். நான் சொல்வது சரியாக இருக்குமானல் அங்கு தலைமைச் செயலாளரே ஒரு தமிழர்.

இந்த நிபந்தனைகளைப் போட்டால் என்ன நடக்கும் என்பதை இப்போது நான் சொல்லவிரும்பவில்லை.

அந்த நிலைமை ஏற்படுமானால் ஒருமைப்பாடு என்பது சந்தேகத்திற்குரியதாகிவிடும்.

அதை நான் கன்னட நடிகர்—என் தம்பி ராஜ்குமாருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியா ஒன்று! எல்லோரும் எங்கும் பணியாற்றலாம் என்றிருக்கிற நேரத்தில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிறோம்.

**வாய்ப்பு தேவை**

அந்த மாநிலத்து மொழியைத் தெரியாதவர்கள் அவர்கள் கற்றுக்கொள்ள அவர்களுக்கு ஓராண்டு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

இங்கு நான் சொல்வதைப் பத்திரிகைகளில் வேண்டுமென்றே வேறு கருத்தை புகுத்தாது வெளியிட வேண்டும்.

நியாய உள்ளத்தோடு நான் சொல்கிறேன். ராஜ்குமாரின் நண்பன் என்பதைவிட அருமை அண்ணன் என்கிற வகையில் நான் சொல்கிறேன். என்பதைப் பத்திரிகைகளில் சரியாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப் பிரச்னைகள் இங்கு எழுந்திருந்தால் என்ன நிலைமை?

கன்னடம் தெரிந்தவர்கள்தான் அங்கு அலுவலகத்திற்கு வரமுடியுமென்று அவர்கள் சொல்வதைப் போல் இங்கு நாம் தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்குத்தான் இங்குப் பணி கிடைக்கும், பணியில் இருக்க முடியும் என்றால் எவ்வளவு பிரச்சனைகள் கொண்டு வருவார்கள்? எவ்வளவு போராட்டம் நடக்கும் ?

## எங்கும் அரசியல்

போராட்டம் இப்போது எதற்கெல்லாம் நடத்துகிறார்கள்! சாப்பாடு போட்டாலும் போராட்டம், போடாவிட்டாலும் போராட்டம்.

தமிழைப் பாராட்டினாலும் போராட்டம், பாராட்டாது எனக்கு இவ்வளவுதான் தெரிந்தது என்றாலும் அதற்கும் போராட்டம்.

ஏழ்மை, இல்லாமை வந்தாலே அரசியல் வருகிறது. கற்றவருக்கு வாய்ப்பில்லை யென்றால் அரசியல் வருகிறது.

உழைக்கத் தெரிந்தவனுக்கு உழைப்பிற்கு வழியில்லையென்றால் அரசியல் வருகிறது.

நான் முன்பு சொன்னேன், ஒரு குழந்தை ஒரு குடிசையில் பிறந்தால் அழுகின்ற குழந்தை எனக்கு பசிக்கிறதம்மா என்று அழுகிறது, அப்போது அரசியல் வருகிறது.

தாய்ப்பால் கொடுக்கும் சக்தி அந்தத் தாய்க்கு இருந்தால் அந்தக் குழந்தையை அழாமல் வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் பணக்காரக் குழந்தைஅழுதால் ஜீரணமாகவில்லை அதனால் அழுகிறது அந்த அளவிற்கு அதற்கு உணவு கொடுத்து விடுகிறார்கள்.

## மொழிப் பிரச்சினை

அயர்லாந்தில் விடுதலை பெற எத்தனையோ சம்பவங்களை முறைப்படுத்தி நடத்தினார்கள்.

என்றாலும் ஓரளவு விடுதலை பெற்றதற்கு மொழியின் மேல் கவனம் வைத்து மொழிப் பிரச்சினையை கொண்டு வந்தபோது அந்த நாடு விடுதலை பெற்றது.

இதை நான் படித்தபோது ஆச்சரியப்பட்டேன்.

இது போன்ற ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்தால் நமக்குப் பிரிவினை வேண்டாம்.

பிரிவினையை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாரில்லை அதற்குரியவர்களை நிச்சயமாக நாம் பெறவில்லை

நாம் அந்த அந்தக் கொள்கையை அண்ணா சொன்னது போல் அன்றே விட்டுவிட்டோம்.

ஆனால் நமக்கென்றிருக்கும் மொழியை நாம் காப்பாற்ற முயற்சி எடுக்கும்போது ஏன் நம்மைப் பிரிவினைவாதிகள் என்று சொல்ல வேண்டும்.

அவர்கள் மாநிலத்திலுள்ள மொழியை ஆட்சி மொழி என்று சொன்னால் அது கூடாது என்று நாம் சொல்வது தவறா?

### சிறந்த மனிதன்

அந்த மொழியைப் பேசுபவர்கள் பிரிவினை வாதிகள் என்று நாம் சொல்ல முடியாதா?

சொல்கிறோம், சொன்னோம், எப்போதும் சொல்கிறோம்.

தயவு செய்து அவரவர் மொழியை அவர்கள் பேணப் பாதுகாக்கும் உரிமை நாட்டில் இருந்தாக வேண்டும்.

அதை தடை செய்யும் எந்தச் சட்டத்தையும் அதிகாரத்தையும் அண்ணா தி.மு.க. கழக அரசும், தமிழக மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

ஏனெனில், தமிழைப் பற்றிப் பேசுகிறோம். தமிழ் வாழ வேண்டும் என்று பேசுகிறோம்.

இங்கு நாவலர் பல்வேறு உதாரணங்களைக் கூறினார். இவற்றையெல்லாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால், சொல்லவேண்டியதிருக்கிறது.

நாம் போய் ஒருவரிடம் நீ தமிழன், உனக்கு அறிவு இருக்கிறது. உனக்குத் தமிழ் தெரியும், வலிமை இருக்கிறது.

ஆற்றல் மட்டுமல்ல ஆய்ந்து பார்க்கும் திறமை.

இவற்றையெல்லாம் பயன்படுத்தினால் உன்னைவிடச் சிறந்த மனிதன் இருக்கமாட்டான் என்று சொன்னால்தான் அவன் யோசிக்கிறான்.

அப்படி நினைத்தவர்கள்தான் இன்று தமிழகத்தில் வாழ்கிறார்கள். அப்படி நினைக்க வேண்டும். தன்னம்பிக்கை வர வேண்டுமென்று பாரதியார் பாடினார். இன்று நானும் தொடர்ந்து சொல்கிறேன்.

## தன்னம்பிக்கை

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னம்பிக்கை வேண்டும். நாம் இதை சரியான முறையில் சரியான வழியில் சரியான நேரத்தில் செய்தால் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும்.

நம்மால் முடியும் என்ற நிலையை ஒவ்வொருவரும் மனத்தில் கொள்ளவேண்டும்.

அதற்கு முனைப்பாக முயற்சி செய்தாக வேண்டும். அந்த முயற்சி செய்வதற்கு தூண்டு கோலாக இருப்பதற்குத் தான் இந்த திருவள்ளுவர் விழா கொண்டாடப்படுகிறது என்ற என் கருத்தை வெளியிட விரும்புகிறேன்.

வள்ளுவர் கோட்டத்தில் நடந்த
திருவள்ளுவர் தின விழாவில்
டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.
அவர்கள் பேச்சில் ஒரு பகுதி
அண்ணா 17-1-1984.
பக்கம் 2-3.

# அறிஞர் அண்ணா நமக்கு சொல்லித்தரவில்லை

## முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

இங்கே ம. பொ. சி. அவர்கள் சொல் வியதைப் போல ஒவ்வொன்றுக்கும் இரு பிரிவுகள் போல இலாக்காக்கள் இருக்கின்றன.

இங்கே ஒரு கல்வி இலாகா, மத்தியில் ஒரு கல்வி இலாகா.

இங்கே ஒரு போலீஸ், மத்தியில் ஒரு போலிஸ்.

இதை விட இன்னொன்று நாம் கொண்டு போய்ப் பணத்தைக்கொடுக்கிறோம். பின்கை நீட்டி வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் அங்கு ஒரு திட்டக்குழு, இங்கு ஒரு திட்டக்குழு.

தமிழ் நாட்டிற்கு என்ன தேவை என்பதை இங்குள்ள திட்டக்குழுவிடம் சொல்ல முடியுமா? மத்தியக் குழு தீர்மானிப்பதா ?

அந்தத் திட்டக்குழு ஏதாவது தீர்மானித்தால் கூட நிதியமைச்சரிடம் போக வேண்டும்.

இவ்வளவுதான் பணம் என்று சொன்னால் நாம் சரி என்று வாங்கிக் கொண்டு வர வேண்டும்.

திட்டத்தில் இல்லாத திட்டமான 75 இலட்சம் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்றாம் அவர்கள் என்ன கேட்கிறார்கள்?

## இரட்டை ஆட்சி

ஏன் திட்டத்தில் கொண்டு வரவில்லை என்கிறார்கள். இதைத் திட்டத்திலே சேர்க்க இருக்கிறோம்.

இரட்டை ஆட்சி இப்போது இந்தியாவில் நடக்கிறதென்பதை நான் மனம் விட்டுச் சொல்வேன்.

ஒருஆட்சி ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆட்சி; ஒரு ஆட்சி தொண்டு செய்ய விரும்பும் ஆட்சி. மாநிலம் தனக்கு வாக்களித்த மக்களுக்கு தொண்டு செய்ய விரும்புகிறது.

ஆனால் அதற்கு அப்பால் ஒரு ஆட்சி இருந்து கொண்டு நீ இதைச் செய்தால் போதும் என்று சொல்கிறது.

## மின் கட்டணம்

மின் கட்டணத்தை உயர்த்தாதே, நாங்கள் போராடுவோம் என்கிறார்கள். இலை ஏழை மக்கள் சொன்னால் பரவாயில்லை அந்தக் கட்சியே இங்கிருந்து சொல்கிறது.

என்ன அர்த்தம்? குழந்தையையும் கிள்ளி விட்டு தோட்டிலையும் ஆட்டுவதா?

இங்கே 12 காசுக்கு ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் தர வேண்டும். உற்பத்திச் செலவு எவ்வளவு ஆனாலும் சரி நாம் கொடுத்தாக வேண்டும்.

அங்கே கட்டணத்தை உயர்த்து என்கிறார்கள்.

இங்கே கடன் கொடுத்ததை ரத்து செய் என்கிறார்கள்.

நாடு பிரிவினையை விரும்பாதவர் இப்படிச் சொல்கிறார்கள்.

நாட்டில் ஒரே சமமான நிலை இருக்க வேண்டும் என்று பாடுபடுகிறவர்கள் சொல்கிறார்கள்.

வருமான வரியை நாங்கள் ஏன் எடுத்துக் கொள்கிறோம் என்றால், எல்லா மாநிலங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் என்கிறார்கள்.

அங்கே 10 பேர் பட்டினி கிடந்தால் இங்கு 10 பேர் பட்டினி கிடக்க வேண்டுமா?

இங்கே பட்டினியைப் போக்க நாம் எதுவும் செய்யக்கூடாது, இது என்ன நியாயம்? இந்த நிலைமையை அவர்கள் மாற்றியாக வேண்டும்.

ஒரே கட்சி ஆட்சிதான் இந்தியாவில் இருக்க வேண்டுமென்று யார் விரும்பினாலும் சரி, அது இந்த நாட்டிற்கு நல்லதல்ல, அது இந்த நாட்டிற்கு ஒத்து வராது என்பதை நான் கண்டிப்பாகக் கூற விரும்புகிறேன்.

அன்று சொன்னேன்; இன்றும் சொல்லுகிறேன். ஒரே கட்சி ஆட்சி என்றிருந்தால் என்ன ஆகும் தெரியுமா ?

இது மாதிரி பேசுவதற்கு ஆளே இருக்காது.

ஒரே கட்சி ஆட்சியிலிருந்து ஒருவர் பேசினால் அவருக்கு பதில் வேறொருவரை நியமிப்பார்.

நாம் கேட்டால் டிஸ்மிஸ், அவர்கள் கேட்டால் சஸ்பெண்ட், இந்த நிலைமை மாற வேண்டும்.

மாநிலக் கட்சிகள் கூடாது என்கிறார்கள்; மாநிலக் கட்சிகள் இல்லாது மத்திய கட்சி ஏது?

அரசியலை வைத்துக்கொண்டு அச்சுறுத்தல் உத்வேகம் பெற்றுவராத நிலையை உருவாக்கிக் கொண்டால்தான் நாடு ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியும் இல்லா விட்டால் அதைக் காப்பாற்ற முடியாது.

இதை தயவு செய்து ஆட்சியிலிருக்கின்றவர்கள் சிந்திக்க வேண்டும்.

### பிரதமர் இந்திராவுக்கு நன்றி

ஒரு வகையில் பிரதமருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மின் துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அய்க்கிய நாடுகள் சபையில் பேச பரிந்துரை செய்தது நான்தான் என்றாலும், உலகமன்றத்துக்கு அனுப்பியவர் பிரதமர். அவரைப் பாராட்ட வேண்டும்.

இதுவரை இந்தியவரலாற்றில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு அமைச்சரை இப்படிப்பட்ட குழுவுக்குப் பொறுப்பாக அமைத்தது கிடையாது.

இதுதான் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிற முதல் வரிகள்.

அன்று பிரதமர் தலைமையிலும் பின் வெளிநாட்டு அமைச்சர் தலைமையிலும் செயல்பட்ட இந்தியக் குழு, இருவரும் டெல்லி திரும்பிய பின் அங்கிருந்த இந்தியக் குழுவுக்குத் தலைவராகப் பண்ருட்டி இராமச்சந்திரன் செயல்பட்டார்.

## நியாயமான அதிகாரங்கள்

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கழகத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் இந்தியக் குழுவுக்குத்தலைவராகச் செயல்பட்டார்.

இதை ஒத்துக்கொண்டு, இவ்வளவு பெரிய நியாயத்தை வழங்கிய பிரதமரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆகவேதான் நான் நம்புகிறேன். இந்தப் பேச்சுகளையெல்லாம் அவர் அறியும்போது நல்ல முடிவு வருமென்று நம்புகிறேன்.

பண்டித நேருகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் போல பிரதமர் நிச்சயமாக ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற மாநிலங்களுக்கு நியாயமான அதிகாரங்களை வழங்க முன் வருவார்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

சுய நலமில்லா நம்பிக்கை வெற்றி பெறும்.

(இந்தச் சமயத்தில் முதல்வர் ஒரு குறிப்பை எடுத்து 13-12-1946 ல் பண்டித நேரு அரசியலமைப்புச் சபையில் குறிக்கோள் தீர்மானத்தை முன் மொழிந்து பேசியதைப் படித்தார். பின் அபுல்கலாம் ஆசாத் 3-4-1946 அன்று கூறியதை முதல்வர் படித்தார். 1945 ஆம் ஆண்டு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மாநிலங்களுக்குச் சம உரிமை பற்றி கூறியதை முதல்வர் படித்தார். 1942ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி பற்றிய காங்கிரஸ் தீர்மானத்தையும் முதல்வர் படித்தார். பின் மாநில சுயாட்சி பற்றிக் வழக்கறிஞர் ஆனந்தம் எழுதிய புத்தகத்தை எடுத்து அதற்கு அணிந்துரை வழங்கிய ம. பொ. சி. யின் கருத்தை முதல்வர் படித்தார்).

நாம் ஏதாவது பேசினால் பிரிவினைக்காரர்கள் என்று சொல்கிறார்கள்.

### புதிய கொள்கை

அவர்கள் மக்களுடைய பிரதிநிதிகளாக இருந்த போது காங்கிரசு நண்பர்கள் என்ன சொன்னார் களோ அதை இப்போது செய்ய வேண்டும்.

புதிய கொள்கை என்பது நாங்கள் சொல்வதில் இல்லை.

இந்த நாடு சுதந்திரம் பெறும்போது என்ன எண்ணம் வைத்துக்கொண்டிருந்தார்களோ, உயிரை தியாகம் செய்த பெரியவர்கள் எந்தக் கொள் கைகளை மக்களுக்கு தந்தார்களோ, வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்று சொல் லும் போது இந்தக் கொள்கைக்கு நீங்கள் வாக்களி யுங்கள் என்று கேட்டார்களோ, அந்தக் கொள் கையை நீங்கள் நிறைவேற்றுங்கள் என்று காங் கிரசை நாம் கேட்கிறோம். ஏனெனில், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருக்கிறது; ஆகவே நாம் கேட் கிறோம்.

வேறு ஒரு கட்சி இருந்தால் அந்தக் கட்சியிடமும் கேட்போம். நாமே இருந்தால் கொடுப்போம். ஆனால், வாங்க வேண்டிய நிலை யில் இருப்பதால் கேட்கிறோம்.

அடுத்த தலைமுறை எடுக்கின்றவர்களாக இருப்பார்கள். அதற்குத் தயவு செய்து வழி வகுக்கா தீர்கள். இளைஞர்கள் அரசியலில் புகுந்து இப்படி இருக்க வேண்டும் என்று அந்தத் தலைமுறை தீர்மானித்து விட்டால், எந்தச் சக்தியும் அதைத் தடுத்துவிட முடியாது.

ஆனால், நமது வேலை அந்த இளைஞர்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டியது. போராட வேண்டாம். அவர்களுக்கு உண்மை தெரிந்து

விட்டது என்றாலே நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### அறிஞர் அண்ணா சொல்லித்தரவில்லை

போராட்டத்தின் மூலமாகத்தான், வன்முறையின் மூலமாகத்தான் அதைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை அறிஞர் அண்ணா நமக்குச்சொல்லித் தரவில்லை.

அறிவை வைத்துப் பிரச்சாரம்செய்துமக்களிடம் உண்மையைச் சொல்லி மக்கள் அதைத் தெரிந்து கொள்ளச் செய்துவிட்டோமானால் அது தானாக வரும்.

மக்கள் இதைத் தெரிந்துகொண்டால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள்.

தவறு செய்பவர்கள் எங்கும் இருக்கிறார்கள். தவறு செய்பவர்கள் அரசியலிலிருந்து தானாகவெளியேறி விட்டாலே நல்லது நடக்கும்.

மக்கள் நம்மைக் கேட்க வேண்டும் இனி தேர்தலுக்கு வருவதாக இருந்தால் இந்த உறுதியை (மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்) தருவதாக இருந்தால் வா இல்லையென்றால் போ என்று மக்கள் கேட்கக்கூடிய நிலைக்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும்.

எல்லோரும் ஒத்துழைத்தால் மக்களைத் தயார் படுத்த முடியும்.

முயற்சித்தால் முடியாதது எதுவுமில்லை. இது நமக்காக அல்ல, நாட்டுக்காக, நாட்டு மக்கள் நன்றாக வாழ்வதற்காக.

ஏழை மக்கள் பிரதிநிதிகள் சட்ட மன்றத்திலும் நாடாளு மன்றத்திலும், இருந்தால்தான் நாம் நினைப்பது நடக்கும்.

*சென்னை கலைவாணர் அரங்கில்*
*நடந்த மத்திய மாநில அரசுகளின்*
*உறவுகள் குறித்த கருத்தரங்கில்*
*பேசிய பேச்சில் ஒரு பகுதி*

*அண்ணா*
*9–1–84*

# நான் ஏன் தி.மு.காவில் சேர்ந்தேன் ?

## டாக்டர் எம். ஜி. ஆர்.

முதலில் நான் காங்கிரசில் இருந்தேன். அப்போது காந்தியவாதி மட்டுமல்ல, கொஞ்சம் தீவிரவாதியாக இருந்தேன். காந்தியவாதியாக இருந்தால் தீவிரவாதியாக இருக்க முடியாது.

கதர்ச்சட்டை அணிபவர்கள் தூய்மையானவர்கள் என்ற நிலை அன்று இருந்தது—ஆனால் இன்று ஒரு சிலரைத்தான் அப்படி பார்க்கிறோம்.

நான் காங்கிரஸ் கட்சியிலிருந்து தி.மு.கவுக்குப் போனேன். காங்கிரசிலிருந்து விலகி தி. மு. க. உறுப்பினரான பின்னரும் கூட கதர் கட்டினேன். அண்ணா தவறு என்று சொன்னதில்லை.

கதராடை அணிந்தும், பகவத்கீதை படித்தும், ராட்டையில் நூல் நூற்றும் இருக்கிறேன். அப்படிப் பட்ட காங்கிரஸ்காரனாக நான் அன்று இருந்தேன்.

அதைச் சொன்னால் பல பேர் மறுப்பார்கள் ராமச்சந்திரன் சொன்னால் மறுக்க வேண்டுமல்லவா அதற்காக சொல்வார்கள்.

பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே என்றார்கள். அதுதான் அண்ணாவின் கொள்கை, இன்று

என்னை சிலர் பாராட்டினாலும் அந்தப் பாராட்டு அண்ணாவுக்குத்தான் போய்ச் சேரும்.

காங்கிரசிலிருந்து நான் ஏன் திமுகவிற்கு வந்தேன்? இதற்கு காரணம் இருக்கிறது. அதற்கான காரணத்தை இப்போது சொன்னால் அது நன்றாக இருக்காது.

சோஷலிஸ்ட் கட்சியில் சேருங்கள் என்றார்கள். சோஷலிசம் என்றால் என்ன என்று கேட்டேன். ஜெயப்பிரகாஷ் நாராயணன் எழுதிய புத்தகத்தைப் படியுங்கள் என்றனர் அதுதான் சோஷலிசமா? என்றேன். ஆமாம் என்றார்கள்.

'நாம் தமிழர்' இயக்கத்தில் சேர்ந்தால் என்ன என்று ஈரோடு சின்னசாமி என்னிடம் கேட்டார்.

'நானும் தமிழன்தானே! உங்கள் இயக்கத்தில் என்ன கொள்கை இருக்கிறது'' என்று கேட்டேன். அவர் புத்தங்களை தந்து படிக்கச் சொன்னார்.

காங்கிரஸ் கட்சியில் 16 அம்ச திட்டம் முன்பு இருந்தது. இது இன்று பல பேருக்கு தெரியாது.

அந்த 16 அம்ச திட்டத்தை நிறைவேற்றினால்தான் அவர் காங்கிரஸ்காரர்.

தாழ்த்தப்பட்டவர் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

சமபந்தி சாப்பிட வேண்டும், சமூக சேவை செய்ய வேண்டும், கதர் மட்டும்தான் உடுத்த வேண்டும் இவை அந்த அந்த காலத்தில் இருந்தவை.

இப்போது காங்கிரசில் இப்படி எத்தனை பேர் இருப்பார்கள்?

காந்தியத்தைப் பற்றி இப்போதும்கூட தெளிவாக சொன்னால் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளார்கள்.

காங்கிரசை விட்டு விலகி 3 வருடங்களுக்குப் பிறகு அண்ணா எழுதிய "பணத்தோட்டம்" படித்தேன் பின்புதான் நான் தி. மு. கவில் சேர்ந்தேன். அண்ணா அந்த நூலில் பொருளாதாரத்தைப் பற்றி மிக எளியநடையில் எழுதியுள்ளார்.

*முன்னாள் முதல்வர் எம். பக்தவசலத்தின்*
*87வது பிறந்தநாள் விழா மலர் வெளியிட்டு விழாவில்*
*புரட்சித் தலைவர் அவர்கள் பேச்சில் ஒரு பகுதி*
*அண்ணா, 22, 12, 1983*

# அடுத்த வெளியீடு

ஆராய்ச்சியாளர், தன்மான இயக்க வீரர்
கழஞ்சூர் செல்வராஜீயின்
தொகுப்பு நூல்கள்.

1. குத்தூசி குருசாமி கட்டுரைத் தொகுப்பு முதல் பாகம்.

2. குத்தூசி குருசாமி கிண்டல் குத்தூசி கட்டுரைத் தொகுப்பு, முதல் பாகம்

3. டாக்டர். டி. எம். நாயர்
சர். பி. தியாகராச செட்டியார்
டாக்டர் சி. நடேச முதலியார்
'வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ வரலாறு'

4. சர். ஏ. இராமசாமி முதலியார் கட்டுரை பேச்சு தொகுப்பு

5. நகைச்சுவை மன்னர் கலைவாணர் என். எஸ். கே. வழக்கின் தீர்ப்பு

6. கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் பேச்சு, கட்டுரைத் தொகுப்பு

7. கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுக்கு கவிஞர்கள் புகழ் மாலை

8. கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுக்கு பேரறிஞர்கள் பாராட்டு

9. குத்தூசி குருசாமி, கட்டுரை மீது
கோர்ட் தீர்ப்பு

10 ‘ குத்தூசி குருசாமி.’ கட்டுரைகள் மீது
பாரீஸ் கோர்ட் தீர்ப்பு

11. விஞ்ஞானத்துடன் போர் ?

எஸ். இராமநாதன், M. A., B. L.

12. திரு. வி. க. அவர்களுக்கு
கைவல்யசாமி எழுதிய கடிதம்

13. டாக்டர் நாவலர் அவர்களுக்கு
அறிஞர் அண்ணா புகழ் மாலை !

மேலும் தொடரும்

வெளியீடு:

குத்தூசி குருசாமி பதிப்பகம்
வேலூர் - ௨வ.௯

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

# கழஞ்சூர் செல்வராஜியின் தொகுப்பு நூல்கள் இதுவரை வெளிவந்தவை

1. டாக்டர் அம்பேத்கார் வாழ்க !
2. பொதுவுடைமை.
   குத்தூசி குருசாமி
3. ‘ சமுகம் சமயம் ’
4. ‘ சமுகம் பொருளாதாரம் ’
5. ‘ சமுகம் அரசியல் ’
   ம. சிங்காரரவேலு, M. A., B. L.

வெளியிடு: நியூசெஞ்சுரி புக் அவுஸ், சென்னை

6. நான் கண்ட அஞ்சா நெஞ்சன்
   பட்டுக்கோட்டை அழகிரிசாமி
   எஸ். வி. லிங்கம்


வெளியீடு: தென்புலம் பதிப்பகம், வேலூர்.

7. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு
   அறிஞர்கள் புகழ் மாலை !
8. அறிஞர் அண்ணா நமக்கு
   அறிவூட்டுகின்ற கடவுள் !
   முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

வெளியீடு: குத்தூசி குருசாமி பதிப்பகம், வேலூர்.

45951B

XCA-273



### “ கழஞ்சூர் செல்வராஜி’யை பற்றி

# டாக்டர் நாவலர் அவர்கள்

புரட்சித் தலைவர் அவர்களின் அருமை பெருமைகளையும், அறிவாற்றல் சிறப்புகளையும், பண்பு நலன்களையும் எளிதாக அறிந்து கொள்ள இந்நூல் (டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு அறிஞர் புகழ் மாலை!) பெருந்துணையாக அமையும் என்பதில் அய்யமில்லை,

இந்நூலின் தொகுப்பாசிரியர் நண்பர் கழஞ்சூர் செல்வராசு பகுத்தறிவு இயக்கத்திலும், திராவிடர் இயக்கத்திலும் நீண்ட காலமாகவே மிகுந்த ஈடுபாடு கொண்டு, அவற்றின் கொள்கைகளைப் பரப்புவது, குறிக்கோள்களை எடுத்தியம்புவது, கோட்பாடுகளுக்கு ஆக்கந் தேடுவது, திட்டங்களை நிறைவேற்றுவது போன்ற அரும் பணிகளில் அயராது பாடுபட்டு வருபவராவார். சுயமரியாதைச் சுடரொளி குத்தூசி குருசாமி அவர்களின் கருத்துகளிலும், செயல்களிலும், நன்மதிப்பும், நம்பிக்கையுங் கொண்டு, அவர் வழியொற்றி நடப்பதிலே, கழஞ்சூர் செல்வராசு அவர்கள் பூரிப்பும், பெருமையும் கொள்பவர். நண்பர் கழஞ்சூர் செல்வராசு அவர்கள் கொள்கைப் பிடிப்போடு ஆற்றிவரும் பொதுத் தொண்டு பெரிதும் பாராட்டுவதற்குரியது. வாழ்க அவர் தம் கொள்கை உள்ளம்; வளர்க அவர்தம் இயக்க முயற்சிகள் வெல்க அவர்தம் பொதுத் தொண்டு !

சென்னை,